**செய்தி வெளியீடு எண்:303** **நாள்:19.06.2021**

**செய்தி வெளியீடு**

**கட்டுமான பொருட்கள் விலை உயர்வு உட்பட அரசு ஒப்பந்ததாரர்களின் கோரிக்கைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றப்படும்.**

**பொதுப்பணித் துறை ஒப்பந்ததாரர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தகவல்!**

-----

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, இன்று சென்னை கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எ.வ.வேலு அவர்கள் தலைமையில் பொதுப்பணித் துறை ஒப்பந்ததாரர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இவ்கூட்டத்திற்கு பொாதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., முன்னிலை வகித்தார். முதன்மை தலைமைப் பொறியாளர் திரு இரா.விஸ்வாநத், தலைமைப் பொறியாளர்கள் திரு ரகுநாதன் மற்றும் திரு. ரவிச்சந்திரன், இணை தலைமைப் பொறியாளர் திரு. சத்தியமூர்த்தி மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் 100–க்கும் மேற்பட்ட கட்டட கட்டுமானம் மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டு தங்களின் பல்வேறு கோரிக்கைகளை பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டக் கொண்டனர். கட்டட பொருட்களின் சந்தை விலையும், பொதுப்பணித் துறை தர விலைப்பட்டியலில் உள்ள விலை வித்தியாசம், தற்போது நிலவும் சிமெண்ட், கம்பி மற்றும் இதர கட்டுமானப் பொருட்களின் விலையினால் ஒப்பந்தப் பணிகள் பாதிப்பு, விலை உயர்வினால் ஒப்பந்தங்களில் கொடுக்கும் விலை உயர்வுக்கான தொகை சந்தை விலையை விட குறைவு, தொகுப்பு முறை ஒப்பந்தப்புள்ளி நீக்குதல், ஒப்பந்தங்கள், ஒப்பந்தப்புள்ளி கூடுதல் தொகைக்கு ஒப்புதல் அளித்தல், தலைமைப் பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர்களுக்கு கூடுதல் ஒப்பளிப்பு அதிகாரங்கள் வழங்குதல், கட்டட பராமரிப்பு நிதி கூடுதலாக ஒதுக்குதல், மின் பணிகளுக்கு தனியாக ஒப்பந்தங்கள் ஏற்படுத்துதல், புதிய ஒப்பந்ததாரர்களை மாவட்ட அளவிலேயே பதிவு செய்திடவும், புதுப்பிக்கவும் அனுமதி, ஆகிய கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

**<u>இறுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது:</u>**

அனைத்து அரசுத் துறைகளுக்கும் கட்டட வசதி செய்து தரும் பெரும் பணியை பொதுப்பணித் துறை உங்களின் ஒத்துழைப்போடு சிறப்பாக செய்து வருகிறது. சில நேரங்களில் பணிமுடிய காலதாமதம் ஏற்படுகிறது. இதை போக்கவும், உங்களின் குறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்யவும் இந்த கலந்துரையாடல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கரோனா காலத்தில் அரசின் வேண்டுகோளை ஏற்று மருத்துவமனைகளில் போர்கால அடிப்படையில் சிறப்பு பிரிவுகள், படுக்கை வசதிகள் ஆக்சிஜன் படுக்கை, ஆக்சிஜன் இணைப்புகள் போன்ற பணிகளை சிறப்பாக செய்து கொடுத்த உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களது அனைத்து கோரிக்கைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது. உங்களது பல்வேறு நடைமுறை சிக்கல்களையும், நியாயமான கோரிக்கைகளையும் கனிவுடன் இந்த அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும். ஒப்பந்த முறை மாற்றம், கட்டுமானப் பொருட்கள் எடுத்துச் செல்வதில் ஏற்படும் நடைமுறை பிரச்சனைகள், அதற்காக ஏற்படும் கூடுதல் செலவினம், பேக்கேஜ் முறை ஒப்பந்தத்தில் ஏற்படும் பாதிப்பு, கம்மி, சிமெண்ட் விலையேற்றத்தால் ஏற்படும் நஷ்டம், மின் பணிகளுக்கு தனியாக ஒப்பந்தம், போன்ற உங்களின் கோரிக்கைகளை துறை செயலாளர், முதன்மை தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர்கள், கட்டிடக் கலை வல்லுநர்கள் ஆகியோருடன் கலந்து பேசி மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். இந்த அரசு அனைத்துப் பணிகளையும் செயல்படுத்துவதில் ஒளிவு மறைவற்ற தன்மையை கடைபிடிக்கும் எனக் குறிப்பிட்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**